## தென்னை பயிர்செய்கைச் சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

தற்போது பயன்பாட்டில் உள்ள எனினும் முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட புத்தக பெறுமதி பூச்சியமாகக் காணப்படும் ரூபா 110,048,336 கிரயமான சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் மீள் பெறுமதியிடப்பட்டு கணக்குவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

முறையே ரூபா 3,577,776 தொகையும் ரூபா 2,417,284 தொகையுமான கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோருக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெறாமையால் அவற்றின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 இன் பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 4.2.2 ஆம் பந்தி மற்றும் 7.4.1 ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பணிப்பாளர் சபைக் கூட்டம் மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. |
| (ii) | 5.1 ஆம் பந்தி | கடந்த மூன்று ஆண்டுகளின் போது செயற்பாட்டு மற்றும் அமைப்புத் திட்ட மீளாய்வு கூட்டமைப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவை எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.2 ஆம் பந்தி | வருடாந்த பாதீட்டில் ஒவ்வொரு நிதியாண்டிற்கான பாதீடிடப்பட்ட வருமானச் செலவினக் கணக்கு, பாதீடிடப்பட்ட ஐந்தொகை மற்றும் பாதீடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் பாதீட்டில் அவை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணம்

(i) நி.பி. 104(2) — ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நட்டங்கள் தொடர்பான அறிக்கையின் ஓர் பிரதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் ரூபா 662,597,042 கூட்டுத்தொகையான அரசாங்கத்திடமிருந்தும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட செஸ் வரிகள் மற்றும் ஏனைய மானியங்கள் என்பவற்றின் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 186,428,747 மிகையாக இருந்ததுடன் இதனோடொடுத்த ரூபா 473,578,883 கூட்டுமொத்தமான அரசாங்கத்திடமிருந்தும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட செஸ்வரிகள் மற்றும் ஏனைய மானியங்களை கணக்கிற்கு எடுத்துகொண்டதன் பின்னர் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 56,137,117 ஆக இருந்தது. முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் செஸ் மானியம் ரூபா 179 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந் நிதிசார் விளைவின் சாதகமான முன்னேற்றத்திற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

#### 2.1.2 நிதிசார் விளைவின் மாற்றம் தொடர்பான மீளாய்வு

(அ) மீளாய்வாண்டில் மாதிரி தென்னந்தோட்டங்களின் செயற்பாட்டு விளைவு ரூபா 55,306,367 தொகையான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்ததுடன் இதனோடு ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த இலாபம் ரூபா 63.530,699 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உரப் பிரிவு ரூபா 9,689,058 பற்றாக்குறையை அடைந்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,580,325 ஆக இருந்தது. இதற்கு முக்கியமாக மீளாய்வாண்டில் உர மானிய திட்டத்தின் கீழ் உரம் வழங்கியமையே காரணமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கப்ருக செயற்திட்டத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,022,521 மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,200,045 ஆகக் காணப்பட்டது.

(ஈ) சபையின் மீளாய்வாண்டிற்கான மிகை மொத்த சொத்துக்களில் 18% ஆகக் காணப்பட்டது.

(உ) சபையின் மொத்த வருமானத்தில் 92% அரசாங்கத்தினாலும் வேறு மானியங்களில் இருந்தும் பெறப்பட்டிருந்ததுடன் 8% ஆனவை மாதிரி தென்னந்தோட்டங்கள், தென்னம் நாற்று மேடைகள் மற்றும் பல்வேறு வருமானங்களில் இருந்து பெறப்பட்டிருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

விரிவாக்கல் பிரிவு, பயிரிச்செய்கை பொருள் மற்றும் உள்ளீட்டுப் பொருள் பிரிவு தாபன மற்றும் ஆளணி அபிவிருத்திப் பிரிவு, நிதிசார் முகாமைத்துவப் பிரிவு ஆகிய 5 பிரிவுகளினை சபை உள்ளடக்கியிருந்தன.

மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு செயற்பாடுகளினதும் இலக்குகளும் அதனை அடைந்துகொள்ளுதலும் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

### 2.2.1 உதவுதொகை செலுத்துதல்

சபையினால் மீளாய்வாண்டின் போது பல உதவுதொகை முறைகள் பேணப்பட்டு வந்ததுடன் ஆண்டின் இறுதியில் உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகளும் செயல்முன்னேற்றமும் பின்வருமாறு இருந்தன.

| உதவுதொகை முறைமை | அளவீட்டு அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | எண்ணிக்கை | | சதவீதம் | |
| | | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 |
| தென்னை/புதிய/மீள்/கீழ்ப் பயிர்ச் செய்கை உதவி முறைமை | ஏக்கர் | 18,000 | 20,000 | 14,900 | 18,642 | 83 | 93 |
| தென்னங் காணிகளை புனரமைத்தல் | ஏக்கர் | 10,000 | 10,000 | 7,046 | 5,472 | 70 | 55 |
| தேசிய வீட்டுத்தோட்ட தென்னைப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம் | தென்னங்கன்று | 800,000 | 885,000 | 757,853 | 808,480 | 94 | 91 |
| தென்னை உர மானியம் | மெற்.தொன் | 4,200 | 8,750 | 5,185 | 1,833 | 123 | 21 |
| கப்ருக முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | ஏக்கர் | 2,950 | 1,506 | 1,634 | 1,287 | 55 | 85 |
| மாட்டுப் பண்ணை உதவி மானிய நிகழ்ச்சித்திட்டம் | பண்ணைகள் | 750 | - | 302 | - | 40 | - |
| துணைப்பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம் | ஏக்கர் | 1,725 | - | 1,014 | - | 59 | - |
| மழை நீர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | குளங்கள் | 27 | - | 16 | - | 59 | - |
| கிளிரீசிடீயா உதவி மானிய நிகழ்ச்சித் திட்டம் | ஏக்கர் | 250 | 1,590 | 186 | 152 | 74 | 10 |

**(அ) புதிய/ மீள்நடுகை/ கீழ் நிலப் பயிர்ச்செய்கை உதவுதொகை மானியம்**

தேங்காய் புதிய/ மீள்நடுகை/ கீழ் நிலப் பயிர்ச்செய்கை உதவுதொகையின் கீழ் 18,000 ஏக்கர்கள் பயிரிடப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 14,900 ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், இதன் பௌதீகச் செயற்பாடு 83% ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும்,

பிராந்திய காரியாலய அளவிலும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் வலய ஆய்வு செய்யப்படுகையில், வடக்குப் பிராந்தியக் காரியாலயத்திலும் 162 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் 11 பிரிவுகளின் ஒட்டுமொத்த செயற்பாடு முறையே 5% முதல் 50% வரையான குறைவான மட்டத்தில் காணப்பட்டது. 11 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் 03 பிரிவுகளின் முன்னேற்றம் 0% ஆக இருந்தது.

**(ஆ) புனர்வாழ்வு உதவுதொகை**

சபையினால் மீளாய்வாண்டின் போது 10,000 ஏக்கர் தெங்குப் பயிர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காக உதவுதொகை வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்ட போதிலும் சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் 7,046 ஏக்கர்களுக்காக மாத்திரம் உதவி வழங்கப்பட்டிருந்தது. அதன் பௌதீகச் செயற்பாடு 70% ஆன போதிலும் பிரிவுக் காரியாலய மட்டத்திலும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் வலய மட்டத்திலும் ஆய்வு செய்யப்படுகையில் 17 பிரிவுக் காரியாலயங்களில் 05 காரியாலயங்களிலும் 162 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் வலய மட்டத்தில் 63 வலயங்களிலும் ஒட்டுமொத்த செயற்பாடு 50% இனைப் பார்க்கிலும் குறைவான மட்டத்தில் நிலவியது. 63 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச மட்டத்தில் 15 இன் முன்னேற்றம் 0% ஆக இருந்தது.

**(இ) வீட்டுத் தோட்ட உதவுதொகை**

வீட்டுத்தேட்ட உதவுதொகையின் கீழ் 800,000 தென்னம்பயிர்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வருட இறுதியில் 757,853 தென்னம் பயிர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இதன் பௌதீகச் செயற்பாடு 94% ஆன போதிலும் பிராந்திய காரியாலய மட்டத்திலும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் வலய மட்டத்திலும் ஆய்வு செய்யப்படுகையில் 17 பிரிவுக் காரியாலயங்களில் 03 இனதும் 162 தெங்கு அபிவிருத்தி

உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் 32 வலயங்களிலும் ஒட்டுமொத்த செயற்பாடு 50% இனைப் பார்க்கிலும் குறைவான மட்டத்தில் நிலவியது. 32 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் வலய மட்டத்தில் 07 இன் முன்னேற்றம் 0% ஆக இருந்தது.

**(ஈ) உர உதவுதொகை**

தெங்கு விளைச்சலை அதிகரிக்கும் நோக்குடன் 4,200 மெ.தொன்கள் உரங்கள் உதவுதொகையாக வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வருட இறுதியில் 5,185 மெ.தொன்கள் உரங்கள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பௌதீகச் செயற்திறன் 123% ஆன போதிலும் பிராந்தியக் காரியாலய மட்டத்திலும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலும் ஆய்வு செய்யப்படுகையில் 17 பிராந்தியக் காரியாலயங்களில் 04 இனதும் 162 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் 30 பிரிவுகளிலும் ஒட்டுமொத்த செயற்பாடு 50% இனைப் பார்க்கிலும் குறைவான மட்டத்தில் நிலவியது. 04 பிராந்தியக் காரியாலயங்களில் 03 காரியாலயங்களினது முன்னேற்றம் 0% ஆக இருந்ததுடன் 30 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் 10 இன் முன்னேற்றம் 0% ஆக இருந்தது.

### 2.2.2 தேசிய தெங்குப் பயிர்ச்செய்கையில் வீழ்ச்சி

தேசிய தெங்குப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதற்காக உதவுதொகை வழங்கப்படுவதற்காக சபையினால் 2000 முதல் 2010 வரை ரூபா 1,736 மில்லியன் தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறே உதவுதொகையினால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்துவதற்கு ஆக்கபூர்வமானதும் திறமையானதுமான விபரமான சேவை நிகழ்ச்சித்திட்டம் அவசியமானதாக சபையினால் இனங்காணப்பட்டு இதற்காக 2000 முதல் 2010 வரை ரூபா 154 மில்லியன் தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது மத்தியவங்கி அறிக்கையின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டின் போது 3,096 காய்களுடனான தெங்கு விளைச்சல் 2010 ஆம் ஆண்டளவில் 2,317 காய்கள்

வரை அதாவது 779 மில்லியன் காய்களால் குறைவடைந்திருந்தன. இத் தென்னம் பயிர் விளைச்சல் 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25% வீழ்ச்சியடைந்துள்ளது. 2000 ஆம் ஆண்டின் போதுதெங்குப் பயிர்ச்செய்கைக்காக 444,000 ஹெக்டெயர் காணிப் பயன்பாடு 2010 ஆம் ஆண்டளவில் 395,000 ஹெக்டெயர்கள் வரை குறைவடைந்திருந்தமை தெங்குப் பயிர்ச்செய்கை குறைவடையக் காரணமாகியிருந்தது. மேலும் தெங்கு பயிர்ச்செய்கையாளர்களினால் தென்னைக்காக உரப் பயன்பாட்டு முறையில் குறைவும் இதற்காகப் பெருமளவில் தாக்கமளித்திருந்தது. 2006 ஆம் ஆண்டின் போது 36,000 தொன் உர அளவு தென்னைப் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2009 இல் உள்ளவாறு இது 17,000 மெ.தொன் உரமாக சரி அரைவாசிக்கு மேலான அளவில் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 மாதிரி தென்னந் தோட்டம்

2010 ஆம் ஆண்டின் போது மாதிரி தென்னந்தோட்டங்களாக 09 தோட்டங்களும் மாதிரி நிலையங்களாக 02 தோட்டங்களும் சபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தன. மேற்கூறிய தென்னந் தோட்டங்கள் மாதிரி நிலையங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2010 ஆம் ஆண்டின் தென்னை விளைச்சல் தொடர்பான சில தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| மாதிரி தென்னந் தோட்டம்/மாதிரி நிலையம் | பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு (ஏக்கர்) | விளைச்சல் தரும் மரங்களின் எண்ணிக்கை | பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை | விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை | வருடாந்த விளைச்சல் காய்கள் | விழுந்த தேங்காய் களின் சதவீதம் | மரத்தின் வருடாந்த சராசரி மதிப்பீட்டு காய்கள் | ஏக்கருக்கான விளைச்சல் காய்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாகன்சோல | 347 | 16,257 | 513,147 | 444,294 | 957,441 | 46 | 59 | 2,759 |
| ரன்தெனிய | 311 | 12,990 | 452,434 | 246,781 | 699,215 | 35 | 54 | 2,248 |
| லேனாவ | 416 | 15,797 | 682,611 | 119,322 | 801,933 | 15 | 51 | 1,928 |
| போபிடிய | 104 | 5,704 | 205,280 | 152,399 | 357,679 | 43 | 63 | 3,439 |
| கேர்ட்லன்ட் | 388 | 13,850 | 524,631 | 342,302 | 866,933 | 39 | 63 | 2,234 |
| கொரேய் | 175 | 5,423 | 163,342 | 21,858 | 185,200 | 12 | 34 | 1,058 |
| பாசிகுடா | 88 | 3,732 | 78,337 | 8,065 | 86,402 | 9 | 23 | 982 |
| மஹயாய | 271 | 11,865 | 594,762 | 388,129 | 982,891 | 39 | 83 | 3,627 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| டேசிவெலி | 299 | 14,653 | 528,185 | 287,128 | 815,313 | 35 | 56 | 2,727 |
| முந்தல் | 14 | 710 | 74,765 | 6,649 | 81,414 | 8 | 115 | 5,815 |
| கொஹொபான | 82 | 3,417 | 65,819 | 30,712 | 96,531 | 32 | 28 | 1,177 |
| மொத்தம் | **2,495** | **104,398** | **3,883,313** | **2,047,639** | **5,930,952** | **35** | **57** | **2,377** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் மொத்த தேங்காய் விளைச்சல் 5.93 மில்லியன் காய்களாகும். இது 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளில் நிலவிய முறையே 6.07 மில்லியன் காய்களையும் 7.15 மில்லியன் காய்களான மொத்த தென்னம் உற்பத்திகளைப் பார்க்கிலும் குறைவான விளைச்சலாகும். இது 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17% ஆலான குறைவைக் காண்பித்தது.

(ஆ) வழமையான நிலையின் கீழ் தென்னம் பயிர்ச்செய்கைக்கான ஒரு ஏக்கர் காணியில் இருந்து வருடாந்தம் ஆகக் குறைந்தது 4500 – 5000 இற்கு இடையிலான காய்களின் விளைச்சலைப் பெற்றிருக்கக் கூடிய போதிலும் ஒட்டுமொத்தமாக சபைக் காணிகளில் இருந்து அவ் வழமையான மட்டத்தையேனும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. சபையின் வழமையான தேங்காய் விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 1000 - 3000 காய்களுக்கு இடையில் காணப்பட்டது.

(இ) 11 மாதிரித் தென்னந்தோப்புகளில் 05 இன் உள்ளபடியான தெங்கு விளைச்சலின் செயற்பாடு ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவியதுடன் இதில் கொஹொம்பான மாதிரி தென்னந் தோப்பின் செயற்பாடு 40% ஆன ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவியது.

(ஈ) தென்னை பயிர்செய்கைச் சபையின் மூலம் மாதாந்த விளைச்சல் பெறும் நன்மையைக் கருத்திற்கொள்ளும் ஆய்வின் பரிந்துரையின் பிரகாரம், தோட்டத் துறையில் மாதாந்தம் தேங்காய்களைப் பறிப்பதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. கரும்பு ஆராய்ச்சிச் சபையின் மூலம் பேணப்படும் ஆராய்ச்சி மற்றும் மரபணு வள நிலையங்களில் பறிக்கும் சுற்றுக்களை 11 இற்கும் 12 இற்கும் மேற்பட்ட அளவில் மேற்கொண்டமையால் 2010 ஆம் ஆண்டின் போது விழுந்த தேங்காய்களின் விளைச்சல் 14% வரையான

ஆகக்குறைந்த மட்டத்தில் இருந்த போதிலும் தென்னை பயிர்செய்கைச் சபையின் மூலம் பேணப்படும் மாதிரித் தென்னந்தோட்டங்களின் பறிக்கும் சுற்றுக்கள் 07 இற்கும் 08 இற்கும் இடையிலான குறைவான தடவைகள் பறிக்கப்பட்டமையால் விழுந்த தேங்காய்களின் விளைச்சல் 35% வரையான உயர் மட்டத்தில் காணப்பட்டது.

**(உ) துணைப்பயிர்களும் தென்னம் விதைகளும்**

கொரெய், டெய்சி வெலி போன்ற மாதிரி தென்னந்தோட்டங்களில் பேணப்பட்ட தென்னம் விதைகளில் இருந்து பெறப்பட்ட வருமானத்திலும் பார்க்க கூடியளவு செலவு செய்யப்பட்டிருந்தமையால் அவற்றில் இருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 355,864 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 2.2.4 தென்னம் பயிர்ச்செய்கைக் காணிகளின் குறைவான பயன்பாடு

சபையால் பேணப்படும் 11 மாதிரித் தென்னங் காணிகளுக்கு உரித்தான தேங்காய்கள் ஒட்டுமொத்தமாக பயிரிடப்பட்ட காணியளவு 2,495 ஏக்கர்களான போதிலும் அவற்றின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளைச்சல் தரும் தென்னை மரங்களின் எண்ணிக்கை 104,398 ஆகக் காணப்பட்டது. அதாவது ஏக்கர் ஒன்றிற்கு விளைச்சல் தரும் தென்னை மரங்களின் எண்ணிக்கை 42 ஆன குறைந்த எண்ணிக்கையாகும். இவை ஏக்கர் ஒன்றிற்கு சராசரி 64 தென்னை மரங்களின் அளவில் 65% ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் தேங்காய்களைப் பயிரிட்ட காணி அளவில் 1/3 அளவில் குறைவான பயன்பாட்டுடனான காணியாகக் காணப்பட்டது.

### 2.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

(அ) 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது சபையில் 18 வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் அவ் விபத்திற்கு உட்பட்ட வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,930,630 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இதற்காக காப்புறுதி நட்டஈடாக ரூபா 1,451,668 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்தது. மீதியான ரூபா 478,962 தொகை சபைக்குச் செலவினமாகக் காணப்பட்டது.

(ஆ) சபையின் முகாமைத்துவத் தீர்மானத்தில் ஓர் உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்தப்பட்டமையால் தொழில் நீதிமன்ற நடுவர் தீர்ப்புக்கு சபை ரூபா 748,440 தொகையான நட்டஈட்டுத்தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறெனினும் இவ் வழக்குத் தீர்ப்பிற்கு எதிராக சபையினால் கொழும்பு மாகாண உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் இது வரையில் இது விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தலைவரால் பதிலளிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர்
(இ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) உதவிப் பணக் கொடுப்பனவு
(ஊ) தென்னங் கன்று உற்பத்தி
(எ) தோட்ட முகாமைத்துவம்
(ஏ) மாதிரி தென்னந்தோட்டங்கள்